

# எங்கே தொலைத்தாள்?

அவள் பெண்ணாக பிறந்ததாலோ என்னமோ, பிறருக்காக வாழ்வதென்பது அவளுக்கு வெகு இயல்பாகவே வருகிறது. பிழைத்தது எங்கேயென்றால், அந்த 'பிறர்' அவள் கணவனும், குழந்தைகளும் மட்டுமே என்ற அந்த மாபெரும் உண்மையை அவளால் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனதில்தான்.

அவள் சட்டத்தரணி ஆனது என்னமோ விளையாட்டாகத்தான். அவளின் மாமாவுடன் சட்டத்தை பயிற்சிபண்ண தொடங்கியதும் விளையாட்டாகத்தான். 'நிம்மி கொண்டு வந்த அதிர்ஷ்டம். அவள் வந்ததிலிருந்து பிரக்டிஸ் நல்லா போகுது' என அவளது மாமா வந்தவர் போனவரிடமெல்லாம் சொல்வார்.

அது காதில் விழும்போதெல்லாம், 'என் அதிர்ஷ்டமா? என் திறமையா? எது மாமாவிற்கு உதவுகிறது?' என மனதில் மெல்லியதாக ஒரு கேள்வியெழும். மனது சோர்ந்துவிடும். சில நிமிடங்களுக்கு பிறகு எல்லாமே மறந்துவிடும்.

மனதிற்குப் பிடித்தவனுடன் கல்யாணம், பின்னர் எஞ்சினியர் கணவனின் மேற்படிப்பிற்காக பிரான்சிற்குப் பயணம், நேராகாலத்தில் அழகிய ஆண்குழந்தை என்று எல்லாமே முறையாகவே நடந்தேறியது.

'நிம்மி அதிர்ஷ்டம் செய்தவள்....', இது அனைவரினதும் தீர்ப்பு. அவளுக்கும் அதுதான் உண்மை என்றுபடத் தொடங்குகையில், மனதினுள் ஏதோ நெருடத்தொடங்கியது.

குழந்தையின் பராமரிப்பையும், சமையலையும் தவிர பிரான்சில் செய்வதற்கு ஒன்றுமேயிருக்கவில்லை. பொழுதைப் போக்குவதற்காக, விதம்விதமாக சமைக்கப் பழகினாள். பழகியதை, அவள் கணவன் தேவா, தன் நண்பர்களை விருந்துக்கழைத்த போது ஆர்வத்துடன் சமைத்தாள்.

தேவாவின் நண்பர்கள் அவற்றை ரசித்துச் சாப்பிடுகையில், தன் நண்பர்களைச் சிரிக்கவைப்பதற்காக, தேவா அவள் சாப்பாட்டை பிழைபிடித்து கேலி செய்வான்.

அது விளையாட்டாகத்தான் என விளங்கினாலும், அவள் மனம் வெதும்பும். இந்த பூலோகத்திலே தான் மட்டும் தனித்து விட்டதாக, மனம் நியாயமற்று பிரமை கொள்ளும். பயம் பிடித்துக்கொள்ளும்.

'உம்மட wife என்ன செய்கிறா?' என்றெழும் வெகு சாதாரணமான அந்தக் கேள்வியை, 'அவ சட்டத்துறை படித்திருக்கிறா. ஆன இப்ப வெறும் housewife தான்' என தேவா சங்கடத்துடன் பதிலளித்து, எதிர்கொள்கையில், நிம்மியின் மனம் அழும். அவமானத்தில் சுருங்கும்.

நெஞ்சின் எங்கோவொரு மூலையில் அந்த 'வெறும் housewife' அடம்பிடித்து ஒட்டிக்கொள்ளும். மேற்படிப்பு படிக்கும் எண்ணம் நிம்மிக்கு இருந்ததேயில்லை. எனினும் 'வெறும் housewife' பட்டத்தை மேற்படிப்பு நீக்குமெனப் பட்டதால், பல்கலைக்கழகமொன்றை தேடினாள். விடுமுறை நாட்களில் செய்யக்கூடிய பாடநெறி ஒன்றைத் தேடினாள்.

மேற்படிப்பு சட்டத்துறையில் என்பதால், ஆயிரம் கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள பல்கலைக்கழகத்தில்தான் இடம் கிடைத்தது.

விடுமுறை நாட்களில் என்பதால் சமாளிக்கலாமென தேவா உத்தரவாதம் தந்தான். குழந்தையை தான் கவனமாகப் பார்த்துக் கொள்வதாகச் சொன்னான். நிம்மியை கவலைப்படாமல் போய்வரச் சொல்லி, தேவா அவளைக் கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தான்.

ஒரு நாளில் ஆயிரம் தடவை நிம்மி போன் பண்ணுவாள். குழந்தை அழுகிறானா என்பாள். அம்மாவை தேடுகிறானா என்பாள். குழந்தை சிரித்துக்கொண்டே இருக்கிறான், என தேவா அவளைச் சீண்டுகையில், நிம்மிக்கு சந்தோஷமாகவும் இருக்கும், ஏமாற்றமாகவும் இருக்கும்.

இப்படியே இரண்டு வருடங்கள் சென்றன. நிம்மியின் படிப்பும் முடிந்தது. தேவாவும் படிப்பு முடிந்து பெரிய கம்பனியொன்றில் வேலை செய்யத் தொடங்கியிருந்தான்.

குழந்தையும் வளர்ந்து, சிறுவர்கள் விளையாடிப் படிக்கும் பாடசாலைக்கு போகத் தொடங்கியிருந்தான். சட்டத்துறையில் என்பதால், நிம்மிக்கு வேலை கிடைப்பது சாத்தியமாகவில்லை.

மாலை நேரங்களில், தேவா தன் வேலையைப் பற்றியும் தன்னுடன் வேலை செய்பவர்கள் பற்றியும் நிம்மிக்குச் சொல்லுவான். அப்பாவைப் போலவே, குழந்தையும் தன் சிறுநண்பர்களைப் பற்றி பாதி உண்மையாகவும் பாதி கற்பனையாகவும் மழலையில் கதையளப்பான்.

நிம்மி அவற்றை ஈடுபாட்டுடன் கேட்பாள். ஆனாலும் மனதின் எங்கோவொரு மூலையில், தனது உலகைத் தொலைத்துவிட்டு, அவர்கள் உலகிலும் இல்லாமல், அவர்கள் உலகை மூன்றாம் மனிசியாக நின்று பார்த்துக் கொண்டிருப்பதாகத் தோன்றும்.

தன் மீது தனக்கே பரிதாபம் ஏற்படும் போலத் தோன்றியது. அதைத் தடுக்க ஒரே வழி ஏதாவது ஒரு வேலைக்குப் போவது தான் என்று தோன்றியது. வயோதிபர் தனியே வாழும் இல்லங்களுக்குச் சென்று, அவர்களின் தேவைகளைக் கவனித்துக்கொள்ள ஆட்கள் தேடுவதாக அறிந்தாள்.

இழந்து கொண்டிருக்கும் தன்னை, முதியோர் சேவையிலாவது திரும்பப் பெறலாமென, அந்த வேலையை ஏற்றுக் கொண்டாள்.

தொடக்கத்தில் அந்த வேலை நிம்மிக்கு பிடித்திருந்தது. நாளாக, நாளாக, அந்த முதியோரின் தனிமையும், மனஉழைச்சலும், இவளை அலைக்கழிக்கத் தொடங்கின.

அவள் எதிர்காலமும், அவள் பராமரித்த முதியோரின் நிகழ்காலமும் ஒன்றுக்குள் ஒன்று பின்னிப்பிணைந்து வரம்புகளைத் தொலைக்கத் தொடங்கின. வேலையை விட்டாள். திரும்பவும் ‘வெறும் housewife’ ஆனாள்.

வாழ்வு ஒரு தடத்தில் ஓடத் தொடங்கியது. தேவா பதவி உயர்வுகளுடன் நிறையவே சம்பாதிக்கத் தொடங்கியிருந்தான். பணமோ தேவைக்கதிகமாக வரத்தொடங்கியது. இரண்டு garage உள்ள வீடு வாங்கினார்கள். புத்தம் புது கார்கள் இரண்டும் வாங்கினார்கள். நிம்மி தன் நேரத்தை, காரை ஓட்டுவதிலும், வீட்டை அலங்கரிப்பதிலுமாக செலவழித்தாள்.

முடியவில்லை - எத்தனை முயன்றும் முடியவில்லை - எதையோ தேடி அலையும் அவள் மனதை ஒருவழிப்படுத்த அவளால் முடியவேயில்லை.

நிம்மியை ஒருமுறை இலங்கைக்கு கூட்டிப்போனால் நல்லதென தேவாவிற்குப்பட்டது. இரண்டு கிழமை லீவில் மூவருமாக இலங்கை வந்தார்கள். கொழும்பில் தேவாவின் பெற்றோருடன் ஒரு கிழமையும், மட்டக்கிளப்பில் நிம்மியின் பெற்றோருடன் ஒரு கிழமையும் தங்கினார்கள்.

இலங்கை காற்று பட்டதனாலோ என்னமோ, நிம்மியின் கன்னங்களில் நிறமும், கண்களில் ஒளியும் வரத்தொடங்கியிருந்தன. குழந்தையும் சொந்தங்களைக் கொண்டாடத் தொடங்கியிருந்தான்.

அவர்கள் சந்தோஷங்களிலிருந்து அவர்களைப் பிரிக்க, தேவாவிற்கு மனம் வரவில்லை. அவன் லீவை நீடிக்கப் பார்த்தான். அதுவும் முடியவில்லை.

தான் மட்டும் பிரான்சிற்குத் திரும்புவதென்று தேவா முடிவெடுத்தான். நிம்மியையும், குழந்தையையும் இன்னும் ஒரு மாதம் இலங்கையிலிருந்து விட்டு வரச்சொன்னான். ஒரு மாதம் போதவில்லை நிம்மிக்கு. இன்னுமொரு மாதம் நின்று வருவதாக தேவாவிற்கு அறிவித்தாள்.

'சும்மா தானே இருக்கிறாய். பிரான்சில் சட்டம் வேறு படித்திருக்கிறாய். எனக்கு உதவி செய்' என்றார் அவள் மாமாவின் நண்பர் நாதன்.

இளைஞர்கள் அடிக்கடி காணாமல் போகும் காலமது. பொலிஸ் பிடித்துப் போனவர்களைத் தேடியலையும் தாய் தகப்பனார், நாதனைத் தேடி வந்தனர். வேலையோ எக்கச்சக்கம். காலம் பறந்தது.

பிரான்சிற்குப் போகும் திகதி வந்தது. தேவாவிடம் போக வேண்டும் போலிருந்தது. தேவாவை தொட்டுப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

ஆனால் பிரான்சில் அவள் வாழ்வை நினைத்த போது, நெஞ்சு வலித்தது. தேவாவையும் குழந்தையையும் தாண்டி, அவர்கள் அறியாமல், அவள் கன்னத்தை தொடும் அந்த தனிமை அவளை பயமுறுத்தியது.

அம்மம்மா, அம்மப்பா, மாமி, மாமா, சித்தி, குழந்தைகள், நாய்கள், பூனைகள், எலிகள், குருவிகள், தும்பிகள் - என குழந்தையும் வாழ்வை ருசிக்கத் தொடங்கியிருந்தான்.

தேவாவை இலங்கைக்கு திரும்பி வரச் சொன்னாள். இலங்கையிலேயே தங்கி விடலாமென்றாள். தேவா அதை ஏற்கவில்லை.

தான் பிரான்சில் பார்ப்பது போன்றதொரு உத்தியோகம் இலங்கையில் தனக்கு கிடைக்காது என்றான். பிரான்சில் சம்பாதிப்பதில் கால்பங்கு கூட இலங்கையில் சம்பாதிக்க முடியாது என்றான். நிம்மி இன்னும் கொஞ்சக்காலம் இலங்கையில் இருந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றான்.

அந்தக் கொஞ்சக்காலத்தில் அவள் பெயர் பரவத் தொடங்கியிருந்தது. அவள் பிறர் வாழ்வில் காட்டும் அக்கறை, குழந்தைகளை அரசிற்கு தொலைத்து விட்ட தாய்மாரை அவளை நோக்கி ஈர்க்கத் தொடங்கியிருந்தது.

நாதனும் தானும் மட்டக்கிளப்பார் வாழ்விலேயே ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதாக நிம்மிக்குத் தோன்றியது. அவள் வாழ்வில் அர்த்தம் தெரிந்தது.

பிரான்சிற்கு இன்று போவம், நாளை போவமென நாட்களோடி, வருடங்கள் இரண்டும் கடந்து விட்டன.

தேவா பிரான்சிலும், நிம்மியும் குழந்தையும் மட்டக்கிளப்பிலுமாக வாழத் தொடங்கியதில் யாருக்குமே இஷ்டமில்லை.

நிம்மியை தேவாவிடம் அனுப்ப ஒரே வழி, அவளை தள்ளி வைப்பது தானென நிம்மியின் குடும்பம் தீர்மானித்தது. அவளையும் குழந்தையையும் தனியே வாழ விட்டால், அந்த தனிமை அவளை தேவாவை தேடி பிரான்சிற்கு துரத்தும் என அவள் குடும்பம் தீர்க்கமாக நம்பியது. நிம்மிக்கு நன்மை செய்வதாக நினைத்து, அவளை அவள் குடும்பம் ஒதுக்கியது.

அவள் குடும்பத்தினர் அவள் வாழ்வில் ஏற்படுத்திய வெறுமையை, அவளது வேலை கொஞ்சம் கொஞ்சமாக நிரப்பத் தொடங்கியது. நிம்மிக்கும் நாதனுக்கும் அவரவர் வேலையிலிருந்த ஈடுபாடு நெருக்கமடைந்து, அவர்கள் இருவரும் ஒன்றாக வாழத் தொடங்கினார்கள். குழந்தைக்கும் தேவாவிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட தூரம், குழந்தை நாதனை ஒதுக்கிவிடாமலிருக்க உதவிற்று.

நிம்மியின் மனதிலோர் மூலையில், எதையோ எங்கேயோ தொலைத்து விட்டதாக ஓர் உணர்வு நிரந்தரமாக குடியேறியது. ஆனாலும் தொலைத்ததை தேடிப் போக வேண்டுமென்று ஏனோ அவளுக்குத் தோன்றவில்லை.

- 2001